

தமிழ்நாடு மின் பகிர்மான கழகம் கிருஷ்ணகிரி மின் பகிர்மான வட்டம் ஓசூர் கோட்டம் ராயக்கோட்டை சாலையில் உள்ள அலுவலக நுழைவு வாயிலில் தேசிய மின் சிக்கன வார விழாவை முன்னிட்டு மின் சேமிப்பு நடவடிக்கைகள் குறித்த விழிப்புணர்வு பிரச்சாரத்தை கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் பிரகாஷ் கொடியசைத்து துவக்கி வைத்தார். உடன் பகுதி செயலாளர் ராமு, மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் சக்திவேல், செயற்பொறியாளர், உதவி செயற் பொறியாளர்கள் கலந்து கொண்டு துண்டு பிரச்சுரங்கள் வழங்கினர்.



ஓசூர் மாநகர திமுக அலுவலகத்தில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாபெரும் ரத்ததான முகாம் நடத்துவது குறித்த ஆலோசனைக் கூட்டத்தில் மாநகர கழக செயலாளரும் மேயருமான சத்யா சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில் செந்தில்குமார் , துணை மேயர் ஆனந்தய்யா, வெங்கடேஷ், ராமு, ராஜா, கோபாலகிருஷ்ணன், ரவிக்குமார், சாந்தி, தியாகராஜ், சீனிவாசன், கலைச்செழியன், ரத்ன சிங், மற்றும் மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர்கள், மாநகர மாணவரணி துணை அமைப்பாளர்கள், மற்றும் கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

### 100 நாள் வேலைத் திட்டத்தை ஒழிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் நாசகாரச் செயலையும் – ஒத்து ஊதும் அ.தி.மு.க.வையும் கண்டித்து

# டிசம்பர் 24 - அன்று 'மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!'

## மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் தலைநகர் சென்னை - அனைத்து ஒன்றியங்களிலும் நடைபெறுகிறது!

**சென்னை, டிச. 21-**

**100 நாள் வேலைத் திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தை திரும்பப் பெற வலியுறுத்தியும் - சட்டத்தைக் கொண்டுவந்த ஒன்றிய பா.ஜ.க. அரசையும் – அதற்கு ஒத்து ஊதும் அ.தி.மு.க.வையும் கண்டித்து தலைநகர் சென்னையிலும் - மாநிலத்தில் உள்ள அனைத்து ஒன்றியங்களிலும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகள் சார்பில் டிச.24- புதன்கிழமை அன்று காலை 10.00 மணியளவில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.**

இந்த ஆர்ப்பாட்டம் குறித்து மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் அறிக்கை வருமாறு:-

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புச் சட்டத்தை சிதைத்து, அதன் திட்டப் பணிகளை சீர்குலைத்து, நிதி ஒதுக்கீட்டை குறைப்பது, மாநிலங்களின் நிதிச்சுமையை அதிகரித்து திட்டத்தை முடக்குவது, வேலைநாட்களை குறைப்பது, பயனாளிகளின் எண்ணிக்கையை குறைப்பது, **'கிராமங்கள் தான் நம் நாட்டின் முதுகெலும்பு' என்ற அண்ணல் காந்தியடிகளின் பெயரை நீக்குவது, இந்தியை திணிப்பது** என சட்டத்தை திருத்தியும் – நூறு நாள் வேலையையே இனி இல்லாமல் செய்து **கிராம மக்களின் வாழ்வாதாரத்தில் அடிக்கத் துடிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் நாசகார சதிச் செயலையும்** – அதற்கு ஒத்து ஊதி தமிழ்நாட்டு மக்களுக்குத் துரோகம் செய்யும் அ.தி.மு.கவையும் கண்டித்தும், சட்டத்தை திரும்பப் பெற வலியுறுத்தியும் **'மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணி' சார்பில் 24.12.2025 புதன்கிழமை அன்று காலை 10.00 மணியளவில், தலைநகர் சென்னையிலும் - மாநிலத்தில் உள்ள அனைத்து கழக ஒன்றியங்களிலும் 100 நாள் வேலைவாய்ப்பினால் பயன்பெறுவோரைத் திரட்டி "மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்"** நடைபெறும்.

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் சார்பில் நடைபெறும் இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில், மாவட்டச் செயலாளர்கள் – நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் – மாநில நிர்வாகிகள் தலைமையில் மாவட்ட நிர்வாகிகள் – ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட, கிளைக் கழகச் செயலாளர்கள் - நிர்வாகிகள், அனைத்து அமைப்புகளில் உள்ள அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் மதச் சார்பற்ற கூட்டணிக் கட்சியைச் சார்ந்த அனைத்து கூட்டணி அமைப்புகளின் நிர்வாகிகள் உள்ளிட்ட அனைவரும் பங்கேற்கின்ற வகையில், மாவட்ட கழகச் செயலாளர்கள் உரிய ஏற்பாடுகளைச் செய்து, தமிழ்நாடு மக்களை வஞ்சிக்கும் ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசையும் – ஒத்து ஊதும் அ.தி.மு.க.வைக் கண்டித்தும் முழக்கங்களை எழுப்பி ஆர்ப்பாட்டம் செய்திட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**ஒழிக! ஒழிக!** G RAM G **சட்டம் ஒழிக!**

**தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடு வெல்லும்!**

இவ்வாறு மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகள் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

## கல்லூரி மாணவர்களுக்கு துணை முதலமைச்சரின் புத்தாண்டுப் பரிசு!







"**10** இலட்சம் மாணவர்களுக்கு ஜனவரி புத்தாண்டு விடுமுறை முடிந்து திரும்பியதும் விலையில்லா மடிக்கணினிகள் வழங்கப்படும்" என்று மாண்புமிகு துணைமுதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். தமிழ்நாட்டுக் கல்லூரி மாணவர்களின் புத்தாண்டுக்கு புத்தொளி பாய்ச்சியுள்ளார் நமது கழகத் தலைவர் மாண்புமிகு முதல்வர் அவர்கள்!

கல்லூரி மாணவர்களுக்குப் பயன்படும் வகையில், செயற்கை நுண்ணறிவுக்கு (AI) ஏற்ற அதிவேக Processor மற்றும் நீண்டநேரம் தாங்கும் Battery என நவீனத் தொழில்நுட்பங்களுடன் இந்த 'லேப்டாப்' தயாரித்து வழங்கப்பட உள்ளதாகவும் தெரிவித்துள்ளார் மாண்புமிகு துணை முதல்வர். கல்லூரி மாணவர்கள் வாழ்வில் ஒளியேற்ற ஈரோட்டுக் கண் கொண்டு செயல்படுத்தப்படும் இத்திட்டம் காவிக் கண்களை உறுத்துகிறது.

3ஆம் வகுப்பில் பொதுத்தேர்வு, புதிய கல்விக் கொள்கை, விஷ்வகர்மா திட்டம் என்று மாணவர்களின் வாழ்க்கைக் கனவுகளைக் காவுகேட்கும் மோடியுடைய பாசிச பா.ஜ.க.வின் கூட்டாளி, இனத்துரோகி எடப்பாடி பழனிசாமியும் தன் மடியிலே நெருப்பைக் கொட்டிக்கொண்டது போல கதறுகிறார்.

தேர்தல் காலம் என்பதால் லேப்டாப் தரப்படுகிறதா? கடந்த 2025-26 பட்ஜெட் தொடரிலேயே 20 இலட்சம் மாணவர்களுக்குக் விலையில்லா மடிக்கணினிகள் வழங்கும் அறிவிப்பு வெளியிடப்பட்டது. ஆனால் ஆக்கப்பூர்வமான உரையாடலை விரும்பாமல் பாதியிலேயே ஓடிவிடும் எடப்பாடி பழனிசாமிக்கு அது தெரிந்திருக்க வாய்ப்பில்லை. அந்தப் பேரவைக் குறிப்புகளை யும் செய்தி படித்த நியூஸ் பேப்பரையும் அவர் பண்ணை வீட்டு அலமாரியில் ஒளித்துவைத்துவிட்டார்கள் போல. "ஆண்டின் நடுவே ஏன் தருகிறீர்கள்?" என்று கேட்கும் எடப்பாடி. ஒருவேளை, "ஆண்டின் நடுவே ஏன் செமஸ்டர் நடத்துகிறீர்கள்?" என்று கேட்டாலும் கேட்பார்.

மாணவர்களுக்குச் சிறந்த எதிர்காலத்தை உருவாக்கப் பாடுபடும் கழகத் தலைவரின் 'திராவிட மாடல்' அரசாங்கத்தின் சாதனைத் திட்டங்களால் பயன்பெறும் ஏழை எளியோர் மீது அக்கறை இருக்கும் அத்தனைபேரும் விலையில்லா மடிக்கணினிகள் அறிவிப்பைக் கொண்டாடி மகிழ்கின்றனர்.

பத்தாண்டு கால அ.தி.மு.க. அவல ஆட்சியைத் துடைத்தெறிய விடியலைத் தேர்ந்தெடுத்த மக்களுக்குத் தொழில்நுட்ப வசந்தத்தைக் கொடுக்கிறது நமது கழகத் தலைவர் தலைமையிலான 'திராவிட மாடல் அரசு!' முன்னேறச் சாரலைப் பொழிகிறது கழக அரசு!

**தமிழ் கா.அமுதரசன்**
**மாநில துணைச் செயலாளர்– தி.மு.க. மாணவர் அணி**



### கரும்பு விவசாயிகள் பயன்பெறும் வகையில்

## வேளாண்மைத் துறை உயர் அலுவலர்களுடன் ஆலோசனை!

### அமைச்சர் இரா.இராஜேந்திரன் மேற்கொண்டார்!

*சென்னை, டிச.21-*

*கரும்பு விவசாயிகள் பயன்பெறும் வகையில், சிறிய கரும்பு அறுவடை இயந்திரத்தை வடிவமைத்து, குறைந்த விலையில் வழங்குவது தொடர்பாக வேளாண்மைத் துறைச் சார்ந்த உயர் அலுவலர்களுடன் நேற்று முன்தினம் அமைச்சர் இரா. இராஜேந்திரன் ஆலோசனை மேற்கொண்டார்.*

*கரும்பு விவசாயிகளின் மீது அக்கறைக் கொண்ட தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான இவ்வரசு கரும்பு சாகுபடியை அதிகரிக்கவும், சர்க்கரை ஆலைகளின் செயல்திறனை மேம்படுத்தவும் எடுக்கப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளின் காரணமாக சர்க்கரை ஆலைகள் நலிவடைந்த நிலையில் இருந்து மீண்டு வருகின்றன.*

*தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, நேற்று முன்தினம் (19.12.2025) சேப்பாக்கம், வேளாண்மைத் துறை இயக்குநர் அலுவலக கூட்டரங்கில் சுற்றுலா மற்றும் சர்க்கரைத் துறை அமைச்சர் ஆர்.ராஜேந்திரன் தலைமையில் கரும்பு விவசாயிகளின் நீண்டநாள் கோரிக்கையினை பரிசீலனை செய்து, கரும்பு விவசாயிகள் பயன்பெறும் வகையில், சிறிய கரும்பு அறுவடை இயந்திரத்தை வடிவமைத்து, குறைந்த விலையில் வழங்குவது தொடர்பாக வேளாண்மைத் துறை சார்ந்த உயர் அலுவலர்கள் மற்றும் கரும்பு அறுவடை இயந்திரங்கள் உற்பத்தியாளர்கள் கலந்து கொண்ட ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.*



*இக்கூட்டத்தில் வேளாண்மை உற்பத்தி ஆணையர் / அரசு செயலாளர், வ.தட்சிணாமூர்த்தி, சர்க்கரைத்துறை இயக்குநர், டி.அன்பழகன், சர்க்கரைத் துறை கூடுதல் இயக்குநர், எஸ்.அருண்ராஜ், வேளாண்மைப் பொறியியல் துறையின் தலைமைப் பொறியாளர் ஆர்.முருகேசன், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தின் ஆராய்ச்சி பிரிவின் இயக்குநர் டாக்டர். இரவீந்திரன், கோயம்புத்தூர், கரும்பு இனப்பெருக்க நிறுவனத்தின் பேராசிரியர் டாக்டர். கவிதா ஆகியோர் கலந்து கொண்டனர்.*

*இந்த ஆலோசனைக் கூட்டத்தில் தமிழக அரசின் வேளாண்த் துறைச் சார்ந்த தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் கரும்பு அறுவடை இயந்திரங்கள் உற்பத்தியாளர்கள் சிறிய கரும்பு அறுவடை இயந்திரம் வடிவமைப்பதில் உள்ள சவால்களை எடுத்துரைத்தனர்.*

*கரும்பு விவசாயிகளுக்கு ஏற்படக்கூடிய வெட்டுக் கூலி பிரச்சனையை தீர்ப்பதற்கும், சிறிய அளவில் கரும்பு பயிரிடக்கூடிய விவசாயிகளின் வயல்களுக்கு இலகுவாக சென்று கரும்பு அறுவடை செய்யும் வகையிலும், கரும்பு விவசாயிகளுக்கு கரும்பு அறுவடைக்கான தொகையை வெகுவாக குறைக்கும் வகையிலும், சிறிய கரும்பு அறுவடை இயந்திரத்தை வடிவமைத்து, குறைந்த விலையில் விரைவில் கரும்பு விவசாயிகளின் பயன்பாட்டிற்கு கொண்டுவர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துறை சார்ந்த தொழில்நுட்ப அலுவலர்கள் மற்றும் கரும்பு அறுவடை இயந்திரங்கள் உற்பத்தியாளர்கள் ஆகியோர்களுக்கு ஆலோசனைகள் வழங்கினார்.*



துணைமுதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு முத்துப்பேட்டை எடையூரில் ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர்கள் சிவமகேந்திரன் ,டி.ஜி.ஆர். தமிழன்பன் , எம்.மாதவன் ஆகியோர் ஏற்பாட்டில் ஒன்றிய செயலாளர் இரா.மனோகரன் தலைமையில் மாவட்ட இளைஞரணி துணைஅமைப்பாளர் வினோத்குமார் முன்னிலையில் ஆதரவற்றோருக்கு நலதிட்ட உதவிகள் வழங்கப்பட்டது. நிகழ்வில் அன்பழகன், சிவா , தினேஷ்குமார், விஜயன், கு.வெங்கடேஷ், பாலாஜி உள்ளிட்டோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.